## தொடமாட்டேன்; தொட்டால் விடமாட்டேன் என்று முழங்கும்

# விஜய் ஆட்சியில் கல்லா கட்டும் அமைச்சர்கள்!

## டெண்டர்கள் ரத்து ஏன்? நடவடிக்கை எடுப்பாரா முதல்வர்?

“முதல்வர் லஞ்சமே இல்லன்னு சொல்றாரு... ஆனா அவர் பெயர் கொண்ட அமைச்சர் தொடங்கி அடுத்தடுத்து எல்லாரும் கல்லா கட்ட ஸ்டார்ட் பண்ணிட்டங்களாமே... இதனால் டெண்டருலாம் கேன்சல் பண்றதா சொல்றாங்களே?”

“கதர் என்றாலே சுதந்திரத்துக்காகப் போராடிய காந்தியடிகள்தான் நமது ஞாபகத்துக்கு வருவார்கள். ஆனால், முதல்வரின் பெயரை தனது பெயருக்கு முன்னாள் வைத்துள்ள மேற்கு மண்டல அமைச்சர் ஒருவரின் துறையில், பொங்கல் பண்டிகைக்கு இலவச வேட்டி, சேலை வழங்குவதற்கான டெண்டரை விட்டார்களாம். கடைசியாக நிறுவனத்தையும் பைனல் செய்து விட்டார்களாம். ஆனால் அந்த நிறுவனத்திற்கு அமைச்சரின் உதவியாளர் ஒருவர் போன் செய்து, அண்ணனை வந்து சந்தித்து, கொடுக்க வேண்டியதை கொடுத்தால் டெண்டர் ஒதுக்கிவிடலாம் என்று கூறினார்களாம். இதைக் கேட்டதும், “நானே குறைந்த விலைக்குத்தான் டெண்டர் போட்டுள்ளேன். பணம் தர முடியாது” என்று கூறியுள்ளார். பணம் கேட்ட விவகாரம் வெளியானதும், இலவச வேட்டி சேலையில் ஊழல் நடந்தால் அரசுக்கு கெட்ட பெயர் வரும். ஆட்சியே நாற்றம் எடுக்கத் தொடங்கி விடும் என்று உளவுத்துறை புகார் அளித்ததாம். டெண்டரை நிறுத்தி வைக்கச் சொல்லி அரசு உத்தரவிட்டுள்ளதாம். இதனால் டெண்டர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாம்.

அதேபோல சுற்றுச்சூழல்துறை சார்பில் தமிழ்நாடு முழுவதும் சாயப் பட்டறைகளில் அதிரடி சோதனை நடத்தப்பட்டதாம். கடைசியில் அமைச்சரின் உதவியாளர் ஒருவர் சாயப்பட்டறை உரிமையாளர்களுக்கு போன் செய்து பணம் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று பேரம் பேசுகிறார்களாம். இல்லாவிட்டால் நடவடிக்கை தொடரும் என தொழிலதிபர்களை மிரட்டுகிறார்களாம். இதனால் கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல், சேலம் மாவட்ட சாயப் பட்டறை அதிபர்கள் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தலாமா என்று




ஆலோசனை நடத்தி வருகிறார்களாம். சேலம் மாநகராட்சியில் தெரு விளக்கு போடுவதற்கான டெண்டர் விடப்பட்டதாம். இந்த டெண்டர் 22 சதவிகிதம் குறைவாக கேட்கப்பட்ட நிறுவனத்துக்கு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்ததாம். ஆனால், அந்த நிறுவனத்தில், மாவட்ட அமைச்சர் சார்பில் மாமூல் கேட்கப்பட்டதாம். இதுகுறித்து அந்த நிறுவனம் சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரிகளுக்கு தெரிவித்தார்களாம்.

இவ்வாறு கடந்த சில நாட்களாக துறையில் மாமூலை மறைமுகமாக வாங்குவதோடு, டெண்டர் விவகாரங்களில் அமைச்சர்கள் தலையிட்டு பணம் பார்க்கத் தொடங்கிவிட்டார்களாம். இதனால, ஒவ்வொரு துறையில் உள்ள அமைச்சர்களிடம் இருந்து எப்போது போன் வருமோ என்று டெண்டர் எடுத்தவர்கள் பீதியில் உள்ளார்களாம்” என்றார் மிஸ்டர் காக்ரோச்.

“அண்டை மாநிலத்தில் அமைச்சர் ஒருவர் சொத்து வாங்கிக் குவிக்கிறாராமே?”

“தமிழ்நாட்டில் ஒவ்வொரு துறைக்கும் ஒரு உளவுக் காவலர் நியமிக்கப் பட்டுள்ளாராம். அவர்கள் அந்தத் துறையில் அமைச்சர்கள் தலையீடு, மாமூல் வசூல், டெண்டர் விவகாரங்களை கண்காணித்து அரசுக்கு அறிக்கை அளிப்பதுதான் அவர்களது வேலை. இவ்வாறு நியமிக்கப்பட்ட உளவுத்துறை போலீசாரைக் கண்டு அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பீதியில் உள்ளனர். அதையும் மீறித் தான் சில மூத்த அமைச்சர்கள் வசூலில் இறங்கிவிட்டனர். குறிப்பாக முதல்வர் விஜய்க்கு அடுத்த இடத்தில் உள்ள அண்டை மாநிலத்தைச் சேர்ந்தவர், சென்னையில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அமைச்சர் வெளிப்படையாகவே வசூலில் இறங்கியுள்ளாராம். இப்போது, அவர் ஒவ்வொரு வாரமும் அண்டை மாநிலத்திற்குச் செல்கிறாராம். அங்கு புதிய நிலம் வாங்கும் முயற்சியில் இறங்கியுள்ளாராம். தமிழகத்தில் சம்பாதித்து, அண்டை மாநிலத்தில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளாராம். அமைச்சருக்கு மட்டும் முதல்வர் கருணைப் பார்வை இருக்கிறது. அப்படியே எங்களையும் வாங்க வேண்டியதை வாங்க அனுமதித்தால், நாங்கள் செலவு செய்த பணத்தையும் எடுத்து விடுவோம் என்கிறார்களாம்”

**நன்றி:**
**தினகரன் அரசியல் டைரி**
**18.8.2026**

---

### கருநாடக வனத்துறையினரால் மூன்று தமிழர்கள் சுட்டுக் கொலை!

## அண்டை மாநிலங்கள் தமிழர்களைப் படுகொலை செய்யும் நிலைக்கு முடிவு இல்லையா?

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக. 19-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கருநாடக மாநிலம், சாம்ராஜ்நகர் மாவட்டம் ஹானூர் தாலுகாவில் உள்ள காவிரி வனவிலங்கு சரணாலயத்தின் ஒரு பகுதியான ஷாக்யா வனப்பகுதியில், மான்களை வேட்டையாடியதாகக் கூறி, ஜகன்னாததொட்டி, மரியமங்கலம், லாசர்தொட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அந்தோணி சாமி, ஜான் ரோஸ் பீட்டர், குமார் ஆகிய மூன்று தமிழர்களை கருநாடக வனத்துறையினர் சுட்டுப் படுகொலை செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியதாகும்.



யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கொடுமை?

அப்பகுதிக்குள் மான்களை வேட்டையாட முயன்றதால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படுவது ஏற்கத்தக்கதல்ல. சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டால், அதற்காகக் கைது செய்யலாம்; சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால், சுட்டுக் கொல்ல வேண்டிய அவசியம் என்ன? மான்களை வேட்டையாட வந்தார்கள் என்று மனிதர்களை வேட்டையாடும் உரிமையை கருநாடக வனத் துறைக்கு யார் கொடுத்தது? யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கொடுமை? இதற்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு அரசின் சார்பிலும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். கருநாடக அரசு இதற்கு உரிய பதிலைக் கூற வேண்டும் என்பதுடன், பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினருக்குக் கருநாடக அரசு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும்.

ஏற்கெனவே 2015 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்தில் 20 தமிழர்கள் செம்மரம் கடத்த முயன்றதாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்ட கொடுமை நடந்தது.

இந்தியக் கடலோரம் அண்டை நாட்டுக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் படுகொலை, ஒரே நாட்டுக்குள் அண்டை மாநில அரசுகளால் இப்படி தமிழர்கள் படுகொலை ஆவதற்கு முடிவேது?

தமிழர்கள் உயிர் என்ன மலிவுப் பொருளா?

கருநாடக அரசு, உணர்ச்சிப்பூர்வ நிகழ்வில், உரிய நடவடிக்கையைத் தாமதிக்காமல் எடுக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## மின்சார இரயில் பெட்டிகளுக்குக் கதவுகள் பொருத்துக!

### கலாநிதி வீராசாமி எம்.பி. – ஒன்றிய இரயில்வே துறை அமைச்சருக்கு கடிதம்!

புதுடெல்லி, ஆக. 18-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்கள் ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், சென்னை புறநகர் இரயில் பெட்டிகளுக்கு, தானியங்கி கதவுகளைப் பொருத்தி, இரயில் பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்கு வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:



தென்னக இரயில்வேயின் கட்டுப்பாட்டில் இயங்கும் சென்னை புறநகர் மின்சார இரயில்கள் மூலம் நாள்தோறும் லட்சக்கணக்கான பயணிகள் பயணம் செய்கின்றனர். அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள், வியாபாரிகள் என தினந்தோறும் சென்னைக்கும், மற்றப் பகுதிகளுக்கும் வந்து செல்லும் பயணிகள் பயன்படுத்தும் முக்கியமான போக்குவரத்து சாதனமாக இந்த புறநகர் இரயில்கள் விளங்குகின்றன. இந்த இரயில்களில் காலையும், மாலையும் மிகுந்த கூட்டமாக மக்கள் செல்லும் போது, அவ்வப்போது, கீழே விழுதல், போன்ற விபத்துகள் ஏற்பட்டு, உயிர் பலிகளும் சில சமயங்களில் நிகழ்கின்றன. எனவே இந்த இரயில்களில் தானியங்கிக் கதவுகள் பொருத்தப்பட்டால் இது போன்ற விபத்துகளைத் தவிர்க்க முடியும். பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்

இவ்வாறு இரயில் பெட்டிகள் தானியங்கிக் கதவுகள் பொருத்தி சோதனை செய்வதற்காக ஒரு சோதனை திட்டம், அதாவது பைலட் புரோஜெக்ட் ஒன்று திட்டமிடப்பட்டு, அதற்கான டெண்டர் அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு இன்னமும் இறுதி செய்யப்படாமல் உள்ளது. என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

எனவே, இந்த ஒப்பந்த புள்ளிகள் விரைந்து ஆய்வு செய்யப்பட்டு தக்க முடிவெடுக்கும்படி சம்பத்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தக்க ஆணைகள் பிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். மேலும் இச்சோதனை திட்டம் வெற்றிப் பெற்றால் சென்னை புறநகர்களையும் இணைக்கும் மின்சார இரயில் பெட்டிகளில் தானியங்கிக் கதவுகளை விரைவில் அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர்.கலாநிதி வீராசாமி அவர்கள் கூறியுள்ளார்.

---

### அவை மரபுகளை மீறுவதா?

## யாருடைய கவனத்தை ஈர்க்கப் பேசுகிறீர்கள்?

### அமைச்சர் நிர்மல்குமாருக்கு கடும் எச்சரிக்கை விடுத்த பேரவைத் தலைவர்!

**சென்னை, ஆக.19-**

**சட்டபேரவையில் அமைச்சர் நிர்மல்குமார் உள்ளிட்ட அமைச்சர்கள் அவை மரபுகளை தொடர்ந்து மீறி வருகின்றனர். இந்நிலையில் நேற்று அமைச்சர் நிர்மல்குமாரின் பேச்சை நீக்கி ‘யாரை திருப்திப்படுத்த தேவையற்றதைப் பேசுகிறீர்கள்’ என்று சட்டப் பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் கடுமையாக எச்சரிக்கை விடுத்தார்.**

சட்டப் பேரவையில் நேற்று அமைச்சர் நிர்மல்குமார் பேசுகையில், ஒரு சில பேருக்கு திடீர் தமிழ் பாசம், தமிழர்கள் மீது பாசம் இருக்கும். அதனை நாம் அனைவரும் வரலாற்றில் பார்த்திருப்போம்; 2009ஆம் ஆண்டு நடைபெற்ற உண்ணாவிரத போராட்டம் பற்றி ஒரு கருத்தை தெரிவித்தார்.

அமைச்சர் நிர்மல் குமாரின் பேச்சுக்கு கழக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். உடனே குறுக்கிட்ட பேரவைத் தலைவர் அமைச்சர் நிர்மல் குமார் கூறிய தேவையற்ற கருத்துகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கி உத்தரவிட்டார்.

மேலும் அமைச்சர் நிர்மல்குமார் இனி தேவையற்றதை பேச அனுமதிக்கமாட்டேன் என்றும் கவன ஈர்ப்பு தீர்மானத்தை ஒட்டிதான் அனைவரும் பேச வேண்டும் என்றும் யாருடைய கவனத்தை ஈர்க்க இப்படி பேசுகிறீர்கள்? என அமைச்சர் நிர்மல் குமாரை சபாநாயகர் கண்டித்தார்.

---

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## முரசொலி மாறன் பிறந்தநாள் விழா!

### திருவுருவப் படத்திற்கு செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை!

செஞ்சி, ஆக. 19-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்செஞ்சியில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் 93.வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள் சங்கர், சிவக்குமார், சீனிவாசன், சுமித்ரா சங்கர், மாவட்ட பிரதிநிதிகள் ஜே.எஸ்.சர்தார், அய்யாதுரை,முன்னாள் கவுன்சிலர் சீனிவாசன்,ஆதிதிராவிட நல அணி துணை அமைப்பாளர், சேகர்,அரசு ஒப்பந்ததாரர் கோஸ் பாஷா, தொண்டரணி பாஷா, பாலசுப்பிரமணியன், ராமச்சந்திரன், வழக்கறிஞர்அரவிந்தராஜ், செந்தில், கறிவேப்பிலை ஏழுமலை, பஸ்டான்ட் செல்லன், ஏழுமலை, சக்திவேல், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.